**செய்தி வெளியீடு எண்: 386** **நாள் : 27.07.2016**

## செய்தி வெளியீடு

<u>தொழில் முனைவோர் மற்றும் வர்த்தக மேலாண்மை பட்டயப்படிப்பு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்.</u>

1. இந்திய தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் அகமதாபாத் மூலமாக நடத்தப்படும் ஓராண்டு தொழில் முனைவு மற்றும் வர்த்தக மேலாண்மை குறித்த பட்டயப்படிப்பிற்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், கிண்டி தொடர்பு மையமாக செயல்படத் துவங்கி உள்ளது.

2. இப்பட்டயப்படிப்பு தொலைதூர கல்விமுறை / தனிநபர் சார்ந்த வல்லுநர்களின் நேரடி ஆலோசனையுடனும் ஆங்கில வழிக் கல்வியாக வழங்கப்பட உள்ளது. அதாவது இப்பட்டயப்படிப்பு ஓராண்டு காலத்திற்கானது. இப்பட்டயப்படிப்பு சேர்க்கை 4 தொகுதிகளில் அதாவது ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் நடைபெறும்.

3. இதில் சேர்ந்துள்ளவர்களுக்கு, சென்னை கிண்டியிலுள்ள தொ.மு.மே. நிறுவனத்தின், நியமிக்கப்பட்ட தொடர்பு அலுவலர் மூலமாக நேரடி ஆலோசனை ஓராண்டு காலத்திற்கு வழங்கப்படும். பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு முடித்து வேலையில் உள்ளவர்கள் அல்லது தொழில் செய்பவராக இருந்தாலும் பதிவுசெய்து ஒரு தொழில் எவ்வாறு ஆரம்பிக்கவேண்டும், எப்படி நடத்தவேண்டும் என்ற விபரங்களைக் கற்றுக் கொள்ளலாம். மேலும் தொழிலை விரிவு படுத்த உதவும் தொழில் திட்டங்கள், முறையான தகவல்களைக் கண்டறியும் வாய்ப்பு, சந்தை பற்றிய ஆய்வு, தொழில் முனைவோர்க்கான ஊக்கம் ஆகியவை வழங்கப்படும் இப்பட்டயப்படிப்பின் கீழ் மூன்று தேர்வுகள் உள்ளன. இப்பட்டயம் பெறுவதற்கு மாணவர்கள் முதல் இரண்டு நிலைகளில் கொடுக்கப்பட்ட பல்வேறு விடைகளில் சரியான விடைகளைத் தேர்ந்தெடுக்கும் முறையில் இரண்டு தேர்வுகளும் (MULTIPLE CHOICE QUESTIONS) விரிவான விடையளிக்கும் முறையில் (DESCRIPTIVE ANSWERS) இறுதித் தேர்வும் எழுதவேண்டும்.

4. இப்பட்டயப்படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் மற்றும் பயனாளிகள் "ஆன்லைன்" மூலமாக விண்ணப்பத்தினை பதிவு இறக்கம் செய்தும் ரூபாய் 12,500/– செலுத்தி படிக்கலாம். இப்பட்டயப்படிப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.

5. மேலும் விவரங்களுக்கு www.editn.in / edbm.html என்ற இணையதளங்களைக் காணவும். அல்லது 044–22252081 / 82 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் edbm@editn.in என்ற மின்னஞ்சல் மூலம் மேலும் தகவல் பெறலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**